முன்னே ஈரோட்டில் ஒரு சிவில் சப்-கோர்ட் ஆரம்பிக்கப் பட்டதா? அதைப் போலவே பொள்ளாச்சியிலும் ஒரு சப்-கோர்ட் ஆரம்பிக்க அரசு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்த அந்தப் பகுதியிலுள்ள நீதிமன்றங்களின் வேலைப்பளுவைக் கணக்கிட்டு அதிகமான நீதி மன்றங்கள் தேவை என்று உயர்நீதிமன்றம் சொன்னால் அரசாங்கம் ஒத்துக்கொள்ளுகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், வழக்குகள் அதிகமாக உள்ளன என்று கருதி சர்க்கார் கோர்ட்டுகள் ஏற்படுத்த வேண்டு மென்று கருதுகிறது. இருந்தாலும் வக்கீல்களுடைய அசோசி யேஷன் என்று சொல்லப்படுகின்றதே அதிலுள்ளவர்களுடைய அபிப்பிராயம் கேட்கிற காரணத்தினால், அவர்களுக்குக் குடியிருப் பதற்கு, வாழ்வதற்கு வசதி எந்த நகரத்திலே இருக்கிறதோ அங்கேதான் கோர்ட் இருக்கவேண்டுமென்று விரும்பி, வேண்டா மென்று கூறுகிறார்கள் என்பது அமைச்சருக்குத் தெரியுமா? ஆகவே, கனம் அமைச்சர் அவர்கள் எங்கெங்கெல்லாம் வழக்குகள் அதிகமாக இருக்கின்றனவோ அந்த அந்தப் பகுதிகளில் கோர்ட்டு கள் ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்யுமா, அதைப்போன்ற உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அதைப்பற்றி அரசாங்கம் வழக்கறிஞர்களின் கருத்தைக் கேட்பதாகத் தெரியவில்லை. உயர்நீதி மன்றம் சொல்லுகிறபடி நீதிமன்றங்கள் துவக்கப்படுகின்றன. வழக்கறிஞர்கள் தாங்கள் எங்கே இருக்கிறோமோ அங்கே இருக்கிற நீதிமன்றத்தை வேறு இடத்திற்குக் கொண்டு போகக் கூடாது என்று தான் சொல்கிறார்களே தவிர, புதிதாக வரக் கூடாது என்று பெரும்பாலும் சொல்வதில்லை. இந்தக் கேள்வி, புதிதாக நீதிமன்றங்கள் திறப்பதைப் பற்றியது.

Director of Indian Medicine

* 320 *Q.*—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is proposed to appoint a Director for Indian Medicine; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) இந்திய மருத்துவத்திற்கு தனி இயக்குநர் துறை ஒன்றை ஏற்படுத்தும் திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது. இந்திய மருத்துவ இயக்குநர் ஒருவரை நியமிப்பது அத்துறை ஏற்படுத்திய பிறகு தான் எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. கரு. சீமைச்சாமி: தலைவர் அவர்களே, இந்திய மருத்துவத்திற்கு தனி இயக்குநர் ஏற்படுத்தும் திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். இந்திய மருத்துவமனை ஒன்றே ஒன்று குற்றாலத்திலே இருக்கிறது

1968 மார்ச் 25]

என்று நினைக்கிறேன். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு மருத்துவமனை ஏற்படுத்துவதை அரசாங்கம் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபற்றி அரசாங்கம் பரிசீலித்து வருகிறது. சித்த மருத்துவ மனையை ஒவ்வொரு மாவட்டத்திலும் துவக்குவதற்கு அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.

திரு. பெ. மலேச்சாமி : தலைவர் அவர்களே, இந்தத் துறைக்கு இயக்குநர் நியமிக்கின்ற காலத்தில் சித்த வைத்தியத்திற்கு ஒரு இயக்குநரை நியமிப்பது பற்றி அரசு முடிவு செய்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபற்றிய யாதொரு முடிவும் எடுக்கப்படவில்லை.

திரு. அ. ப. சண்முகசுந்தரம் : தலைவர் அவர்களே, சித்த மருத்துவ முறையிலே, கோவையிலே ஜி.டி. நாயுடு போன்றவர்கள் நல்ல ஆராய்ச்சிகள் எல்லாம் செய்து வருகிறார்கள். அவர்களுக்கு ஊக்கம் கொடுக்கின்ற வகையிலே கோவையிலே ஒரு சித்த மருத்துவ ஆராய்ச்சிக் கூடம் ஏற்படுத்துவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தற்போது அது போன்ற திட்டம் அரசாங்கத்திடம் இல்லை.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : 'காலேஜ் ஆப் இண்டியன் மெடிசின்' குற்றாலத்தில் ஏற்படுத்தப் போவதாக முதலில் ஜி.ஓ. போடப்பட்டது, சட்டசபையில் எல்லாம் பேசப் பட்டது. ஆனால் சட்டசபை அங்கீகாரமே இல்லாமல் திருநெல் வேலியிலே இருந்து கொண்டிருக்கிறது. ஆதலால், குற்றாலத்தில் பழையபடி ஆரம்பிப்பதற்கு ஏதாவது உத்தேசம் இருக்கிறதா? அல்லது ஜி.ஓ.-வே மாற்றப்பட்டு விட்டதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினர் அவர்கள் தனியாகக் கேள்வி போட்டால் விவரமாக பதில் அளிக்க முடியும்.

திரு. மு. ச. சிவசாமி : துணைத் தலைவர் அவர்களே, நியமிக்கப்பட இருக்கும் அந்தத் தனி இயக்குநர் எந்தக் கல்வியின் அடிப்படையில்—யோக்கியதாம்சத்தின் அடிப் படையில்—நியமிக்கப்பட உத்தேசம் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அந்த விவரங்களை எல்லாம் அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இந்திய மருத்துவம் என்பது சித்த, யுனானி, ஆயுர்வேதம் இந்த மூன்று மட்டுமா ? அல்லது அதில் ஏதாவது ஒன்றிரண்டா? அதோடு கூட ஹோமியோபதியும் சேர்ந்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த மூன்றும் என்று தான் கருதுகிறேன். ஹோமியோபதி இந்திய மருத்துவ முறையில் சேராது.

THIRU K. VINAYAKAM : Sir, what is the attitude of this Government towards the Indian System of Medicine generally? Have the Government recognised this as a branch of study worth to be pursued. Alsa, are the Government aware of the fact that this System of Medicine is not a scientifically codified system and a lot of research will have to be done and if so, what are the steps which the Government have taken either to appoint a Director or to do research work? Also, whether the treatment through this kind of medicine has borne any fruit and what are the results available with the Government?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : All these aspects are under the consideration of the Government?

திரு. மா. பா. சாரதி : தலைவர் அவர்களே, இந்த பஞ்சாயத்து ஒன்றியத்தின் மூலமாகவும், நகராட்சிகளின் மூலமாகவும் இனி மேல் ஏற்படுத்தக்கூடிய சிறிய வைத்திய ஆஸ்பத்திரிகளில் சித்த வைத்திய முறைதான் இருக்கவேண்டுமென்று கட்டளை போடப் படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினர் அவர்களுடைய நல்ல ஆலோசனை பரிசீலிக்கப்படும்.

திரு. என். சங்கரய்யா : ஐயா, இன்று இந்த சித்த வைத்தியர் களும் அதே போல் அவர்கள் மருந்துகள் தயாரிப்பதற்கான மூலப் பொருள்களும் நல்ல முறையில் கிடைக்கவில்லையென்று சொல்லப் படுகிறது. அரசாங்கம் இதற்கென்று ஒரு தனி இயக்குநர் ஏற்படுத்தியதற்குப் பிறகாவது இந்திய வைத்திய முறையிலே தயாரிக்கப்பட்ட மருந்துகளை நியாயமான முறையில் தயாரித்து மக்கள் நம்பிக்கையோடு வாங்குவதற்கு ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபற்றி பரிசிலனை செய்யப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

Buses within Municipal limit

* 321 Q.—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether there is any proposal to allow the Municipalities to ply town buses within the Municipal areas; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம். நகராட்சி எல்லைக்குள் பேருந்துகள் ஓட்டுவதற்கான அனுமதி கேட்டு ஒரு நகராட்சி மன்றத்தின் வேண்டுகோள் வந்துள்ளது.

(இ) அது அரசாங்கத்தின் ஆலோசனையில் உள்ளது.

THIRU T. MARTIN : Sir, may I request the Hon. Minister to state whether any step has been taken by this Government to amend the District Municipalities Act to provide for the municipalities running this bus service within their jurisdiction?